2013 -14 முதுகலை ஆசிரியர் தமிழ்

Booklet series : A

1. "மதுரையை தென்தமிழ் மதுரை" எனக்குறிப்பிடும் நூல்
அ)சிலப்பதிகாரம் ஆ)மணிமேகலை இ)வளையாபதி ஈ)குண்டலகேசி

***விடை : மணிமேகலை***

விளக்கம் : 25 வது காதை - ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை

**தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்** -139 வது வரி – (பாடல்)

பாடலின் பொருள் : ***தென்றமிழ் மதுரையின்கணுள்ள அழகு மிக்க கலைமகளே***

*மணிமேகலையில் மதுரையை பற்றிய இடம் பெற்றிருக்கும் பிற பாடல் வரிகள்*

**தக்கண மதுரை தான்சென்று எய்திச்,**

- **தக்கண மதுரை தான்சென்று அடைந்தபின்**
- **தக்க மதுரை தான்வறிது ஆக**
- **வெம்மையின் மதுரை வெவ்வழல் படுநாள்**

*சிலப்பதிகாரத்தில் மதுரையை பற்றிய இடம் பெற்றிருக்கும் பிற பாடல் வரிகள்*

**மாட மதுரை புகுந்தனன் அதுகொண்டு**
- **மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்**
- **அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்**
- **உரைசா லடிகள் அருள மதுரைக்**
- **மாட மதுரையும் பீடா ருறந்தையும்**
- **மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்**
- **மதுரை மூதூர் யாதென வினவ**
- **மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன**
- **தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்**
- **மாமறை முதல்வ மதுரைச் செந்நெறி**
- **மாண்புடை மரபின் மதுரைக் கேகுமின்**
- **மடுத்துடன் கிடக்கும் மதுரைப் பெருவழி**
- **மதுரை மூதூர் மாநகர்ப் போந்தது**
- **மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து**
- **மதுரைத் தென்றல் வந்தது காணீர்**
- **வானவர் உறையும் மதுரை வலங்கொளத்**
- **தீதுதீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்**
- **மாட மதுரை மாநகர் புகுகென**
- **மல்லல் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்**
- **வன்பழி தூற்றுங் குடியதே மாமதுரைக்**
- **ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்**
- **இடமுலை கையால் திருகி மதுரை**
- **உரைசால் மதுரையோடு அரைசுகே டுறுமெனும்**
- **மதுரைமா தெய்வ மாபத் தினிக்கு**
- **மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்**
- **முலையினால் மாமதுரை கோளிழைத்தாள் காதல்**
- **மதுரை மூதூர் மாநகர் சுட்டதும்**
- **மாட மூதூர் மதுரை புக்காங்கு**
- **வாய்வாட் டென்னவன் மதுரையிற் சென்றேன்**
- **பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்க்கு**
- **உரைசெல வெறுத்த மதுரை மூதூர்**
- **ஓங்குசீர் மதுரை மன்னவற் காண**
- **மதுரை மூதூர் மாநகர் கேடுறக்**
- **உடன்கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரைமா நகர் புகுந்து**
- **சூழ மதுரையார் கோமான்றன் தொல்குலமே;**
- **மாட மதுரை மகளிர் குறுவரே**

2. பதினெண் கீழ்க்கணக்கில் இடம் பெறும் அகநூல்கள்
அ)4 ஆ)5 இ)6 ஈ)7

***விடை : 6***

ஐந்திணை ஐம்பது , திணைமொழி ஐம்பது , ஐந்திணை எழுபது , திணைமாலை நூற்றைம்பது ,ஐந்திணை அறுபது , கார் நாற்பது. அறம் -11 புறம் - 1

3. சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை இடம் பெறும் நூல்
அ)சிலப்பதிகாரம் ஆ)மணிமேகலை இ)சீவகசிந்தாமணி ஈ)குண்டலகேசி

***விடை : மணிமேகலை***

விளக்கம் : 27 வது காதை



www.Padasalai.Net www.kalvisolai.in

2013 -14 முதுகலை ஆசிரியர் தமிழ்

1. விழாவறை காதை
2. ஊரலருரைத்த காதை
3. மலர்வனம் புக்ககாதை
4. பளிக்றை புக்ககாதை
5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை
6. சக்கரவசளக்கோட்டம் உரைத்த காதை
7. துயிலெழுப்பிய காதை
8. மணி பல்லவத்துத் துயருற்ற காதை
9. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை
10. மந்திரங் கொடுத்த காதை
11. பாத்திரம் பெற்ற காதை
12. அறவணர்த் தொழுத காதை
13. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை
14. பாத்திர மரபு கூறிய காதை
15. பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதை
16. ஆதிரை பிச்சையிட்ட காதை
17. உலக அறவிபுக்க காதை
18. உதயகுமரன் அம்பலம் புக்க காதை
19. சிறைக் கோட்டம் அறக்கோட்டமாகிய காதை
20. உதயகுமாரனைக் காஞ்சனன் வாளாலெறித்த காதை
21. கத்திற்பாவை வருவதுரைத்த காதை
22. சிறைசெய் காதை
23. சிறைவிடு காதை
24. ஆபுத்திரனாடு அடைந்த் காதை
25. ஆபுத்திரன் மணிபல்லவம் அடைந்த காதை
26. வஞ்சி மாநகர் புக்க காதை
27. சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட காதை
28. கச்சிமாநகர் புக்க காதை
29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை
30. பவத்திறுமறுகெனப் பாவை நோற்ற காதை.

4. வைரவியாபாரி இடம் பெறும் காப்பியம்
அ)மணிமேகலை ஆ) சீவகசிந்தாமணி இ)வளையாபதி ஈ)சிலப்பதிகாரம்
***<u>விடை : வளையாபதி</u>***

www.Padasalai.Net www.puthiyavidiyal.in

- நவகோடி நாராயணன் எனும் வைர வாணிகன் பிற்பட்ட குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தியை மணந்தான்.
- அதனால் வணிகர் குலத்தார் வெறுத்தனர், அவளைப் பிரிந்து அயல்நாடு சென்று பொருளீட்டி, காவிரிப் பூம்பட்டினத்தில் தன் குலத்துப் பெண்ணொருத்தியோடு வாழ்ந்து வருகிறான்;
- முன்பு தொடர்பு கொண்டிருந்த பெண்ணுக்குப் பிறந்த பிள்ளை வளர்ந்து, தந்தையை அறிந்து வணிகர் அவையினரால் வைர வணிகன் மகனே என முறை வழங்கப் பெற்று, தன் தாய் பால் தந்தையைச் சேர்க்கின்றான்.

5. "பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்" என்ற வரிகள் இடம் பெறும் நூல்
அ)சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ)வளையாபதி ஈ)குண்டலகேசி
***<u>விடை : குண்டலகேசி</u>***
விளக்கம் :

- எண்: 9 தலைப்பு : இதுவும் அது
- "யாம் நம்முடைய உடம்பு நந் தாய்மாரின் வயிற்றின்கண் கருவாகியிருந்த நிலைமையிலிருந்து இறந்தும் பின்னர் எய்திய குழவிப் பருவம் இறந்தும்"

6. எந்தக்கல்விக்குழுவால் இடைநிலை அளவில் பன்நோக்குகல்வி முறை பரிந்துரைக்கப்பட்டது ——
அ)இராமூர்த்தி குழு ஆ)தாராசந்த் குழு இ)ஹன்டர்ஸ் குழு ஈ)ஹார்டாக்குழு
***<u>விடை : ஆ)தாராசந்த் குழு</u>***

7. அரசியலமைப்புச்சட்டத்திருத்தத்தின்படி ------------ஆம் ஆண்டு ‘கல்வி’ இணைக்க பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டது.
அ) 1974 ஆ)1975 இ)1976 ஈ)1977
***விடை : 1976***

8. “14 வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையையும் பணியில் அமர்த்தக்கூடாது”.. என்பது இந்திய அரசியல் சாசனம்-------- பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது .
அ) சட்டப்பிரிவு23 ஆ)சட்டப்பரிவு 45 இ)சட்டப்பரிவு 30 ஈ) சட்டப்பிரிவ 45(A)
***விடை : சட்டப்பிரிவு 23***

விளக்கம் : **Article 23 in The Constitution Of India 1949**

23. Prohibition of traffic in human beings and forced labour
(1) Traffic in human beings and begar and other similar forms of forced labour are prohibited and any contravention of this provision shall be an offence punishable in accordance with law
(2) Nothing in this article shall prevent the State from imposing compulsory service for public purpose, and in imposing such service the State shall not make any discrimination on grounds only of religion, race, caste or class or any of them

9. 1979 ஆம் ஆண்டில் வெளியிட்ட ‘கல்வியில் சமூக, ஒழுக்க மற்றும் ஆன்மீக விழுமங்கள்’ என்ற பதிப்பில் ---------விழுமங்கள் கல்வியின் மூலம் போதிக்கப்படலாம் என்று வரையறுத்தது
அ) 90 ஆ) 84 இ)45 ஈ)36
***விடைஆ) 84***

10. மனித சக்தி திட்டமிடல் ----------வகை செயல்பாட்டினால் அதிக தாக்கத்திற்குள்ளாகிறது
அ)ஏற்றுமதி செய்தல் ஆ)இறக்குமதி செய்தல் இ)இருத்தி வைத்தல் ஈ)இடம்பெயர்தல்
***விடை : இடம்பெயர்தல்***

11. உவமை தோன்றும் நிலைக்களன்
அ)பகை ஆ)காதல் இ)விளையாட்டு ஈ)வினை
***விடை : ஆ)காதல்***

உவமைக்கு நிலைகளன்கள் 4. --- சிறப்பு, நலன், காதல், வலிவு

- அரசன்போல் வீற்றிருந்தான் – சிறப்பு
- ஓவத்து அன்ன இடனுடை வரைப்பு – செயற்கை-நலம்
- பாவை அன்ன பலர் ஆய் மா கவின் – காதல் களனில் பிறந்தது
- அரிமா அன்ன அணங்குடைத் துப்பு – வலிமைக் களனில் பிறந்தது

12. பொறி நுதல் வியர்த்தல்
அ)இரண்டாம் நிலை மெய்ப்பாடு ஆ)மூன்றாம் நிலை மெய்ப்பாடு
இ)முதல்நிலை மெய்ப்பாடு இ)ஆறாம் நிலை மெய்ப்பாடு
***விடை : முதல்நிலை மெய்ப்பாடு***

விளக்கம் : மெய்ப்பாட்டின் முதற்கூறு : புகு முகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல்
நகு நயம் மறைத்தல், சிதைவு பிறர்க்கு இன்மையொடு
தகு முறை நான்கே ஒன்று என மொழிப
- மெய்ப்பாட்டியல்.தொல்.பொருள் 257

- *தலைவன் விரும்பும் விருப்பத்தைத் தானும் விரும்புதல்,*



www.kalviSolai.in www.Padasalai.Net

- *உள்ளத்தில் நாணமும் அச்சமும் கொள்ளுதலால் ஒளி மிக்க நெற்றியில் வியர்வை அரும்புதல்*
- *புன்னகை அரும்புவதற்குரிய தன் விருப்பமிகுதியை மறைத்தல்,*
- *தன் உள்ளம் சிதைந்தாலும் அதனைப் புறத்தார்க்குப் புலனாகா வண்ணம் மறைத்தல்*

13. உவமப்போலி
அ)நான்கு ஆ)மூன்று இ)இரண்டு ஈ)ஐந்து
***<u>விடை : ஐந்து</u>***
விளக்கம் : **“உவமப் போலி ஐந்து“ என மொழிப’** – தொல்காப்பியர் - உவமையியல் - 295
உவமப்போலி (உள்ளுறை உவமம்) 5 வகை வினை, பயன், உறுப்பு, உரு, பிறப்பு

14. உள்ளுறை உவமத்தின் பயன்
அ)சுவை ஆ)கற்பனை இ)வடிவம் ஈ)உணர்ச்சி
***<u>விடை :அ)சுவை</u>***
- <u>கிழவன் கூற்றில் உள்ள உள்ளுறை உவமங்கள் **இன்பம்** பயப்பதாகவும், துணிவை வெளிப்படுத்துவதாகவும் அமையும்</u>
- *கிழவி கூற்றில் (மருதம், நெய்தல் என்னும்) இரண்டு திணைகளுக்கு உரிமை பூண்டதாக இருக்கும்*
- *தோழி, செவிலி ஆகியோர் கூற்றுகளில் காலத்துக்கும், இடத்துக்கும் பொருந்துமாறு அமையும்*

15. ”தளிர் அடிமென் நகை மயிலைத்தாது அவிழ்தார்க்காளைக்கு இவ்வடிகளில் அமைந்து உள்ளது
அ)உவமை ஆ)அடைமொழி இ)உள்ளுறை ஈ)இறைச்சி
***<u>விடை :ஆ)அடைமொழி</u>***

www.Padasalai.Net

16. “போர்க்குறிக்காயமே புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும்!ஆ! நோக்குமின்!
என்று கூறிய பாத்திரம்
அ)குடிலன் ஆ)நடராசன் இ)சீவகவழுதி ஈ)நாராயணன்
***<u>விடை : சீவகவழுதி</u>***
விளக்கம் : XI - செய்யுள் - 54 வது பக்கம் - மனோன்மணீயம்

www.puthiyavidiyal.theni.in

17. ‘பவளக்கொடி’ நாடக ஆசிரியர்
அ)பரிதிமாற்கலைஞர் ஆ)பம்மல்சம்பந்த முதலியார் இ)டி.கே.சண்முகம் ஈ) சங்கரதாஸ்சுவாமிகள்
***<u>விடை : சங்கரதாஸ்சுவாமிகள்</u>***

18. ‘தமிழ் நாடகத்தந்தை’ எனப்போற்றப்படுபவர்
அ)பெ.சுந்தரம் பிள்ளை ஆ) பம்மல் சம்பந்த முதலியார் இ)பரிதிமாற்கலைஞர் ஈ)இராசமாணிக்கம்
***<u>விடை : பம்மல் சம்பந்த முதலியார்</u>***

19. ‘வாசகர்தான் பனுவலுக்கான அர்த்தங்களை வெளிக்கொணர்கிறார்’ என்று கூறும் கோட்பாடு
அ)சோசலிச எதார்த்தவாதம் ஆ)பின் காலனியம் இ)பின் நவீனத்துவம் ஈ)அமைப்பியல்
***<u>விடை : ஈ)அமைப்பியல்</u>***

20. ‘சிட்டுக்குருவி எனது பலகணியின் வழியே வரின் யான் என்னை மறந்து சிட்டாகவே மாறி விடுவேன்’ என்று கூறிய கவிஞர்
அ) ஷெல்லி ஆ)கீட்ஸ் இ)காட்டே ரூஸ் ஈ)டி.எஸ்.எலியட்

***விடை : ஆ)கீட்ஸ்***

21. புறப்பொருள் வெட்சிப்படலத்தில் ‘உண்டாட்டு’ எனப்படுவது
அ)எதிர்த்துப்போரிடுவது ஆ)பகைவர் அரண்களைக்காப்பது
இ)கள் அருந்திக்களிப்பது ஈ)ஆநிரைகளைப்பகிர்ந்து வழங்கல்

***விடை : இ)கள் அருந்திக்களிப்பது***

விளக்கம் : வெட்சி : உண்டாட்டு ஆவது பகைவரை வென்று ஆ நிரைகளை கவர்ந்துவந்த வீரர்கள் வெற்றிக் களிப்பில் மது உண்டு ஆடுவதாகும்.

22. வெட்சிப்படலத்தில் ‘துடிநிலை’ என்று கூறப்படுவது
அ)குடிப்பழமையைப்புகழ்தல் ஆ)கொற்றவையைப்புகழ்தல்
இ)மன்னரைப்புகழ்தல் ஈ)வீரர்களைப்புகழ்தல்

***விடை : அ)குடிப்பழமையைப்புகழ்தல்***

தொடுகழன் மறவர் தொல்குடி மரபிற்
படுக ணிமிழ்துடிப் பண்புரைத் தன்று.
கட்டும் கழல்வீரர் பழங்குடி முறைமையில் மிக்க கண்ணினையுடைத்தாய் ஒலிக்கும் துடியைக் கொட்டுமவன் குணத்தைச் சொல்லியது
முந்தை முதல்வர் துடிய ரிவன்முதல்வர்
எந்தைக்குத் தந்தை யிவனெனக்கு - வந்த
குடியொடு கோடா மரபினோற் கின்னும்
வடியுறு தீந்தேறல் வாக்கு.

- என் பாட்டனுடைய பாட்டன் முதலாயினார்க்குத் துடிகொட்டினார்
- இவன் பாட்டனுடைய பாட்டன் முதலாயினார் என் தமப்பனுக்கு இவன் தமப்பன் துடிகொட்டினான்
- இவன் எனக்குத் துடி கொட்டுவான்
- வழிவந்த குடிமுறைமையோடு பிறழாத முறைமையினை யுடையவனுக்கு இன்னமும் வடித்தலுற்ற தித்தித்த மதுவினது தெளிவை வார்ப்பாயாக

வெட்சிப்படலம் : 19.துடிநிலை – புறப்பொருள் வெண்பாமாலை – சாமுண்டிதேவநாகனார் உரை

23. கரந்தைப்பூ பூக்கும் காலம்
அ)மாசி பங்குனி ஆ)சித்திரை வைகாசி இ)ஐப்பசி கார்த்திகை ஈ)மார்கழி தை

***விடை :அ)மாசி பங்குனி***

24. வஞ்சி மறவரின் போர்த்தொழிலைச்சிறப்பித்துக்கூறும் துறை
அ)குடிநிலை ஆ)வாள்நிலை இ)குடைநிலை ஈ)கொற்றவை நிலை

***விடை : ஈ)கொற்றவை நிலை***

விளக்கம் : போருக்குச் செல்லும் வேந்தன் வெற்றி பெறுவதற்கான கொற்றவையின் அருள் குறித்துக் கூறுவது . எனினும் இத்துடன் போருக்குச் செல்லும் வீரர்களது போர்த்திறம் குறித்துக் கூறுவதும் இத்துறையுள் அடங்கும். இதனை விளக்க, நீண்ட தோளினையுடைய வேந்தன் வெற்றி பெறுவானாக என்று நல்ல பொருட்கள் நிரம்பிய பாத்திரத்தை உயர்த்திப் பகைவரைப் புறமுதுகிட வைக்கும் கொற்றவைத் தெய்வத்தின் நிலையைக் கூறியது என்னும் பொருள்படும்;

*“நீள்தோளான் வென்றி கொள்கென நிறைமண்டை வலனுயரிக்”*
*கூடாரைப் புறங்காணும் கொற்றவைநிலை யுரைத்தன்று*

25. வட்கார் மேல் செல்வது
அ)காஞ்சித்திணை ஆ)வெட்சித்திணை இ)கரந்தைத்திணை ஈ) வஞ்சித்திணை

***விடை : ஈ) வஞ்சித்திணை***

விளக்கம் : வெட்சி நிரை கவர்தல் ; மீட்டல் கரந்தையாம்
***வட்கார் மேல் செல்வது வஞ்சி***; உட்காது

எதிர்ஊன்றல் காஞ்சி ; எயில்காத்தல் நொச்சி
அது வளைத்தல் ஆகும் உழிஞை - அதிரப்
பொருவது தும்பையாம் ; போர்க்களத்து மிக்கோர்
செரு வென்றது வாகையாம்

26. 'தாண்டகவேந்தர் என்றழைக்கப்பெறுபவர் யார்?
அ)திருநாவுக்கரசர் ஆ)திருஞானசம்பந்தர் இ)மாணிக்கவாசகர் ஈ)சுந்தரர்
***விடை : அ)திருநாவுக்கரசர்***

27. சைவத்திருமறைகளுள் முதல் மூன்று திருமுறைகளின் ஆசிரியர் யார்?
அ)திருநாவுக்கரசர் ஆ)மாணிக்கவாசகர் இ)திருஞானசம்பந்தர் ஈ)சுந்தரர்
***விடை : இ)திருஞானசம்பந்தர்***

28. பன்னிரு ஆழ்வார்களுள் கடவுளைப்பாடாது அடியாராம் நம்மாழ்வாரைப் பாடியது யார்?
அ)மதுரகவிஆழ்வார் ஆ)திருமங்கை ஆழ்வார் இ)ஆண்டாள் ஈ)திருப்பாணாழ்வார்
***விடை : அ)மதுரகவிஆழ்வார்***

29. தஞ்சைவாணன் கோவையின் ஆசிரியர் பெயர் தருக:
அ)பொய்யாமொழிப்புலவர் ஆ)பொய்கையார் இ)சேக்கிழார் ஈ)ஒட்டக்கூத்தர்
***விடை : அ)பொய்யாமொழிப்புலவர்***

- தஞ்சைவாணன் கோவை பொய்யாமொழிப் புலவர் என்பவரால் இயற்றப்பட்ட ஒரு அகப்பொருட்கோவை நூலாகும்.
- இந்நூல் தஞ்சைவாணன் என்னும் சிற்றரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்டது.

30. திருமந்திரத்தின் உட்பிரிவாக எத்தனைத்தந்திரங்கள் இடம் பெற்றுள்ளன
அ)7 ஆ)8 இ) 9 ஈ)6
***விடை : இ)9***

- முதல் தந்திரம் - ஞானோபதேசம்
- இரண்டாவது தந்திரம் - அன்பர்கட்கு ஆண்டவன் அருள்புரிந்தமை
- மூன்றாம் தந்திரம் - அட்ட மாசித்தி அட்டாங்க யோகம் சோதிடம் யோகப் பயிற்சி
- நான்காம் தந்திரம் - மந்திர நூற்கருத்துகள் சக்கரங்கள் சிவசக்தி வழிபாடு
- ஐந்தாம் தந்திரம் - சரியை கிரியை யோகம் ஞான மார்க்கம்
- ஆறாம் தந்திரம் - சிவகுரு தரிசனம் திருவடிப்பேறு ஞானோபதேசம் துறவு தவம் வேடம் நீறு
- ஏழாம் தந்திரம் - சிவபூசை குரபூசை அடியார் பெருமை
- எட்டாம் தந்திரம் - காம வெகுளி மயக்கமாகிய முக்குற்றம் பக்தியுடைமை புறங்கூறாமை
- ஒன்பதாம் தந்திரம் - ஐந்தெழுத்தின் பேதங்கள் சிவதரிசனம் சித்தி மார்க்கம் முக்தி மார்க்கம்

31. கட்டளைக்கலித்துறையில் அமைந்த யாப்பு நூல்
அ)இலக்கணவிளக்கம் ஆ)யாப்பருங்கலம் இ)யாப்பருங்கலவிருத்தியுரை ஈ) யாப்பருங்கலக்காரிகை
***விடை : ஈ) யாப்பருங்கலக்காரிகை***



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

விளக்கம் :கட்டளைக்கலித்துறை (காரிகை)என்ற செய்யுளால் ஆனதால் இந்நூலுக்குக்காரிகை என்ற பெயர் ஏற்பட்டது.

32. அணியிலக்கணம் கூறும் நூல்களுள் முதன்மையானது
அ)தண்டியலங்காரம் ஆ)மாறனலங்காரம் இ)இந்திரகாளியம் ஈ)மாறனகப்பொருள்
***விடை : அ)தண்டியலங்காரம்***

33. தண்டியலங்கார் பொருளணியியலில் தன்மையணி முதல் பாவிக அணி வரை உள்ள மொத்த அணிகள்
அ)25 அணிகள் ஆ) 27 அணிகள் இ) 35 அணிகள் ஈ)37 அணிகள்
***விடை : இ) 35 அணிகள்***
விளக்கம் : XII STD சிறப்புத்தமிழ் - 233 பக்கம்

34. 'தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு' இதில் இடம் பெறும் அணி.
அ)உவமையணி ஆ)வேற்றுமையணி இ)அதிசிய வணி ஈ)சிலேடைஅணி
***விடை : ஆ)வேற்றுமையணி***

**இரு பொருள்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமையைக் கூறி, பின் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது**

35. ஐந்திலக்கணம் கூறும் முதல் இலக்கண நூல்
அ) வீரசோழியம் ஆ)முத்துவீரியம் இ)நேமிநாதம் ஈ)பிரயோகவிவேகம்
***விடை : அ) வீரசோழியம்***

www.Padasalai.Net

36. பெரும் பொழுதின் வகைகள்
அ)ஐந்து வகைப்படும் ஆ) ஆறு வகைப்படும் இ)எட்டு வகைப்படும் ஈ)மூன்று வகைப்படும்
***விடை : ஆ) ஆறு வகைப்படும்***

**காரே, கூதிர் , முன்பனி , பின்பனி,**
**சீர் இளவேனில் , வேனில் ,என்று ஆங்கு**
**இரு- மூன்று ,திறத்தது தெரி பெரும் பொழுதே.** நம்பியகப்பொருள் : அகத்திணையியல் - 11

பாடலின் பொருள் : நிறுத்த முறையானேபெரும்பொழுதினது பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று. கார் முதலாக வேனில் ஈறாகச்சொல்லப்பட்ட ஆறு பகுதியினை உடைத்தாம்புலவோரான் ஆராயப்பட்ட பெரும்பொழுது என்றவாறு.

www.puthiyavidiyaltheni.in

37. மல்குகார் மாலை
அ)நெய்தற்கு உரித்தே ஆ)மருதத்திற்கு உரித்தே இ)முல்லைக்கு உரித்தே ஈ)குறிஞ்சிக்கு உரித்தே
***விடை : இ)முல்லைக்கு உரித்தே***
விளக்கம் : **மல்கு கார் , மாலை , முல்லைக்கு உரிய** நம்பியகப்பொருள் :அகத்திணையியல்15

- முல்லைக்குரிய பெரும்பொழுதும்சிறுபொழுதும் உணர்த்துதல் நுதலிற்று.
- மிகாநின்ற கார்காலமும்மாலைக்காலமும் ஆகிய இரண்டு காலமும் முல்லைக்குரியஎன்றவாறு.

- இருள் புலர் காலை , மருதத்திற்கு உரித்தே.
- வெய்யோன் பாடு , நெய்தற்கு உரித்தே.

38. முல்லைத்திணைப்பறை
அ)தொண்டகப்பறை ஆ)துடி இ)கோட்பறை ஈ)ஏற்றுப்பறை
***விடை : ஈ)ஏற்றுப்பறை***
*நெடுமால் முதலாகக்கான்யாறாடல் ஈறாகச் சொல்லப்பட்டனவெல்லாம்முல்லைக் கருப்பொருளாம்*
நெடுமால் குறும்பொறை நாடன் றோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி
இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்
கான வாரண மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை
நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவம்
கொன்றை காயா மன்றலங் குருந்தந்
தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை
ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
சாமை வரகு தரமுடன் வித்தல்
அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழல் ஊதல்
மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னாடன் முல்லைக்கருப் பொருளே நம்பியகப்பொருள் - முல்லையின் கருப்பொருள் : 22

www.Padasalai.Net

தொண்டகப்பறை – குறிஞ்சி
துடி – பாலை
கோட்பறை – நெய்தல் (மீன்கோட்பறை)

www.puthiyavidiyaltheni.in

39. அகப்பொருள் மெய்யுறு புணர்ச்சியின் உட்பிரிவுகள்
அ)ஏழுவகைப்படும் ஆ)பத்துவகைப்படும் இ)பன்னிரண்டு வகைப்படும் ஈ)ஆறு வகைப்படும்.
***மெய்யுறு புணர்ச்சி நிகழுங் காலம்.***
**காட்சி முதலாச் சாக்காடு ஈறாக்,**
**காட்டிய பத்தும் கைவரும் எனினே,**
**மெய் உறு புணர்ச்சி எய்துதற்கு உரித்தே.**
***விடை : ஆ)பத்துவகைப்படும்*** நம்பியகப்பொருள் - முல்லையின் கருப்பொருள் : 36

40. களவிற்குரிய கிளவித்தொகைகள்
அ)பதினேழு கிளவித்தொகைள் ஆ)பதினைந்து கிளவித்தொகைகள்
இ)பத்து கிளவித்தொகைகள் ஈ)பதினெட்டு கிளவித்தொகைகள்
***விடை : அ)பதினேழு கிளவித்தொகைள்***



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

# 2013 -14 முதுகலை ஆசிரியர் தமிழ்

1. இயற்கைப்புணர்ச்சி –
2. வன்புறை
3. தெளிவு
4. பிரிவுழிக் மகிழ்ச்சி
5. பிரிவுழிக்கலங்கள்
6. இடந் தலைப்பாடு
7. பாங்கற் கூட்டம்
8. பாங்கீமதி உடன்பாடு
9. பாங்கிற் கூட்டம்
10. பகற்குறி
11. பகற்குறி இடையீடு
12. இரவுக்குறி
13. இரவுக்குறி இடையீடு
14. வுரைதல் வேட்கை
15. வரைவு கடாதல்
16. ஒருவழித் தணத்தல்
17. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்

41. 'ஞானபீட விருது பெற்ற' புதினம்
அ)அகல்விளக்கு ஆ)அலைஓசை இ)வேங்கையின்மைந்தன் ஈ)சித்திரப்பாவை
***விடை : ஈ)சித்திரப்பாவை***
- பி. வி. அகிலாண்டம் சித்திரப்பாவை நூலுக்காக 1975ஆம் ஆண்டின் ஞான பீட விருது பெற்றார்.
- இவ்விருது பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர்

42. வா.செ.குழந்தைசாமியின் சாகித்ய அகாடமி விருது பெற்ற திறனாய்வு நூல்
அ)திருக்குறள் நீதி இலக்கியம் ஆ)வாழும் வள்ளுவம்
இ)பாரதிகாலமும் கருத்தும் ஈ)கம்பன் புதிய பார்வை
***விடை : ஆ)வாழும் வள்ளுவம்***
- 1988 - வாழும் வள்ளுவம் (இலக்கிய விமர்சனம்) – வா. செ. குழந்தைசாமி

43. ஏறுதழுவதலை கதைககளமாகக்கொண்ட புதினம்
அ)வளைக்கரம் ஆ)அழுக்குகள் இ)வாடிவாசல் ஈ)கல்லும் மண்ணும்
***விடை : இ)வாடிவாசல்***
விளக்கம் : ஆசிரியர் சு.சு.செல்லப்பா

44. 'குடும்பத்தேர்' சிறுகதையின் ஆசிரியர்
அ)ஆதவன் ஆ)பூமணி இ)நகுலன் ஈ)மௌனி
***விடை : ஈ)மௌனி***
விளக்கம்: மணிக்கொடி இதழ் - 1936

45. பட்டியல் - I ஐ பட்டியல் - II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத்தேர்ந்தெடு

| பட்டியல் - I | பட்டியல் - II |
|---|---|
| a. வித்தன் | - i)கமலாவின் கல்யாணம் |
| b. கு.அழகிரிசாமி | - ii)அக்பர் சாஸ்திரி |
| c. கல்கி | - iii)மவராசர்கள் |
| d. தி.ஜானகிராமன் | - iv)திரிபுரம் |

குறியீடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| A. | (iv ) | (iii) | (ii) | (i) |
| B. | (iii ) | (iv) | (i) | (ii) |
| C. | (ii ) | (iv) | (i) | (iii) |
| D. | (iii ) | (ii) | (iv) | (i) |



www.Padasalai.Net www.puthiyavidiyaltheni.in

***விடை :*** B.(iii ) (iv) (i) (ii)

46. மூன்றாம் தமிழ்ச்சங்கம் இருந்ததாகக்கருதப்படும் இடம் எது?
அ)கபாடபுரம் ஆ) மதுரை இ)காஞ்சிபுரம் ஈ)கரந்தை
***விடை : ஆ) மதுரை***

47. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்தைப்பாடியவர் யார்?
அ)பூரிக்கோ ஆ)பாண்டியன்மாறன்வழுதி இ)பெருந்தேவனார் ஈ)உருத்திரசன்மனார்
***விடை : இ)பெருந்தேவனார்***

48. பொருநராற்றுப்படை எம்மன்னனின் சிறப்பைப்பாடுகிறது ?
அ)கரிகால்சோழன் ஆ)இளந்திரையன் இ)பாண்டியன்நெடுஞ்செழியன் ஈ)நல்லியக்கோடன்
***விடை : அ)கரிகால்சோழன்***

49. சரியான விடையைத்தேர்ந்தெடுக்க
A) இரண்டாம் பத்து – பல்யானை செல்குழு குட்டுவன்
B) மூன்றாம் பத்து – களங்காய் கண்ணி நார் முடிச்சேரல்
C) நான்காம் பத்து - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
D) ஐந்தாம் பத்து – கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்
***விடை :*** **D) ஐந்தாம் பத்து – கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்**

50. "ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து
சான்றோரு ரைத்த தண்டமிழ்த் தெரியர் ஒருபது பாட்டும்" எனக்கூறியவர் யார்?
அ)நச்சினார்க்கினியர் ஆ)பேராசிரியர் இ)அடியார்க்குநல்லார் ஈ)இளம்பூரணர்
***விடை : அ)நச்சினார்க்கினியர்***

51. தமிழ் உரைநடையின் தந்தை என்று அழைக்கப்படுபவர்?
அ)சீகன்பால்குஐயர் ஆ)ஜி.யு.போப் இ)வீரமாமுனிவர் ஈ)இவர்களுள் எவருமில்லை
***விடை : இ)வீரமாமுனிவர்***

52. பாரதியாரின் சின்னசங்கரன் கதை என்னும் நூல்
அ)கதைக்கவிதை ஆ)உரைநடைநூல் இ)குறுங்காவியம் ஈ)சுயசரிதம்
***விடை : அ)கதைக்கவிதை***

53. 'வரலாற்றுக்களஞ்சியம்' என்று யாருடைய நாட்குறிப்பை குறிப்பிடுவர்?
அ)ஆனந்தரங்கம் பிள்ளை ஆ)சி.வை.தாமோதரம் பிள்ளை
இ)கதிரைவேற்பிள்ளை ஈ)அ.குமாரசாமிப்பிள்ளை
***விடை : அ)ஆனந்தரங்கம் பிள்ளை***

- மார்ச் 30, 1709 - ஜனவரி 10, 1761
- பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பனியின்துபாசாகவும் துய்ப்ளெக்சு என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.
- பதினெட்டாம் நூற்றாண்டு காலத்திய பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலமாகவும் ஆவணமாகவும் இலக்கியமாகவும் திகழக்கூடிய நாட்குறிப்புகளைத் தந்தவர்.
- 1736 முதல் 1761 வரை ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் நாட்குறிப்பு எழுதியுள்ளார்.



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

- ❖ உலக நாட்டுறிப்பு இயக்கத்தின் முன்னோடியான புகழ் பெற்ற ஆங்கில நாட்குறிப்பாளர் சாமுவேல் பெப்பீசு என்பவரைப் போன்று, தமிழில் நாட்குறிப்பு எழுதியமையால், இவரை *இந்தியாவின் பெப்பீசு* எனவும் *நாட்குறிப்பு வேந்தர்* எனவும் போற்றுகின்றனர்.

54. ‘காட்டு வாத்து’ தொகுப்பினை வெளியிட் பதிப்பகம்
அ)கசடதபற ஆ)மணிக்கொடி இ) எழுத்து ஈ)வானம்பாடி
***விடை : இ) எழுத்து***
விளக்கம் : சென்னை – 1962 ஆசிரியர் :ந.பிச்சமூர்த்தி .
- ❖ 2004ல் இந்நூல் நாட்டுமையாக்கப்பட்டது.

55. உ.வே.சாமிநாதையர் முதன் முதலில் பதிப்பித்த நூல்
அ)சிலப்பதிகாரம் ஆ)மணிமேகலை இ) சீவகசிந்தாமணி ஈ)பெருங்கதை
***விடை : இ) சீவகசிந்தாமணி***

56. வைகறை விடியல்
அ)முல்லைத்திணைக்குரிய காலம் ஆ)குறிஞ்சித்திணைக்குரிய காலம்
இ) மருதத்திணைக்குரிய காலம் ஈ)நெய்தல் திணைக்குரிய காலம்
***விடை : இ) மருதத்திணைக்குரிய காலம்***

57. ‘இருத்தலின்’ உரிப்பொருளுக்குரிய திணை
அ)குறிஞ்சித்திணை ஆ)நெய்தல் திணை இ)முல்லைத்திணை ஈ)மருதத்திணை
***விடை : இ)முல்லைத்திணை***

**புணர்தலும்பிரிதலும் இருத்தலும் ஊடலும்**
**இரங்கலும் இவற்றி னிமித்தமு மெனவாங்**
**கெய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே.**

மேலெய்திய உரிப்பொருள்புணர்தலும், புணர்தல் நிமித்தமும்; பிரிதலும்,பிரிதல் நிமித்தமும்; இருத்தலும் இருத்தல்நிமித்தமும்; ஊடலும் ஊடல் நிமித்தமும்; இரங்கலும்,இரங்கல் நிமித்தமும் எனப் பத்து வகையினை யுடைத்தாம்என்றவாறு.

58. மருதநில தலைமக்கட் பெயர்
அ) ஊரன் மகிழ்நன் ஆ)சேர்ப்பன் துறைவன் இ)மீளி விடலை ஈ)மலைநாடன் வெற்பன்
***விடை : அ) ஊரன் மகிழ்நன்***

**இந்திரன் , ஊரன் , பைந்தார் மகிழ்நன் ;**
**கெழுதகு கற்பின் கிழத்தி , மனைவி,**
**உழவர் ,உழத்தியர் , கடையர் , கடைச்சியர் ;**
**மழலை வண்டானம் , மகன்றில் , நாரை,**
**அன்னம் ,போதா ,நல் நிறக் கம்புள்,**
**குருகு , தாரா ; எருமை , நீர்நாய் ;**
**பெருகிய சிறப்பின் பேரூர் , மூதூர்;**
**ஆறு , மனைக்கிணறு ; இலஞ்சி , தாமரை,**
**நாறு இதழ்க் கழுநீர் , நறுமலர்க் குவளை ,**
**காஞ்சி , வஞ்சி , பூஞ்சினை மருதம் ;**
**செந்நெல் , வெண்நெல் , அந் நெல்லரிகிணை,**
**மன்றன் முழவம் , மருதயாழ் , மருதம் ;**



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

**மன்று அணி விழாக்கோள் , வயல் களை கட்டல்,**
**அரிதல் , கடாவிடல் , அகல் குளம் குடைதல்,**
**வருபுனல் ஆடல் , மருதக் கருப்பொருளே.**

59. முல்லைத்திணைக்குரிய தெய்வம்
அ)இந்திரன் ஆ) கண்ணன் இ)கொற்றவை ஈ)வருணன்
***விடை : ஆ) கண்ணன்***

60. மருதத்திணைக்குரிய பூ
அ)காந்தள் பூ ஆ)மராம் பூ இ) தாமரை ஈ)நெய்தல் பூ
***விடை : இ) தாமரை***
**ஆறு , மனைக்கிணறு ; இலஞ்சி , தாமரை,**

61. பன்னாட்டு கூட்டமைப்பு நாடுகளின் பொதுசபை 1974ஆம் ஆண்டினை ------என அறிவித்தது
அ)உலக ஒற்றுமை ஆண்டு ஆ)உலகசுற்றுச்சூழல் ஆண்டு
இ) உலக மக்கள் தொகை ஆண்டு ஈ)உலககல்வி ஆண்டு
***விடை : இ) உலக மக்கள் தொகை ஆண்டு***
1970 – உலக கல்வி ஆண்டு

62. கற்போர் கட்டுப்பாட்டு கற்பித்தல் முறை---என்பவரால் உருவாக்கப்பட்டது.
அ)இராபர்ட்மேகர் ஆ)ஸ்கின்னர் இ)சிட்னி பிரஸ்ஸி ஈ)நார்மென் கௌடர்
***விடை : அ)இராபர்ட்மேகர்***

63. 19ஆம் நூற்றாண்டில் ----------அவர்களின் ஆய்வின்படி வங்காள மாநிலத்தில் இலட்சம் மக்கள் தொகையில் 4 பெண்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றிருந்தனர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது
அ)சாட்டர்ஜி ஆ)ராக்பெல்லர் இ)ஆதிசேஷையா ஈ)ஆடம்ஸ்மித்
***விடை : இ)ஆதிசேஷையா***

64. புத்தக திரிபுக்காட்சி உருவ விளக்கப்படம் பின்வருவனவற்றுள் எதனை குறிப்பதாக அமைகிறது
அ)பகுப்புகவனம் ஆ)கவனவீச்சு இ)கவனவகுப்பு இ)கவன ஊசல்
***விடை : இ)கவனவகுப்பு***

65. மனவெழுச்சி வளர்ச்சியில் ‘ஹெடானிசக்கோட்பாடு’ என்ற கருத்து எதனை மையமாகக்கொண்டு அமைகிறது
அ)இனிமை ஆ)முதிர்ச்சி இ)கற்பித்தல் முறைகள் ஈ)அடைவு
***விடை : அ)இனிமை***

- இன்பமே மதிப்புப்பெற்ற ஒரே இலக்கு என்ற மெய்யியல் கோட்பாடு
- இன்பமும் துன்பமும் மனிதரை உந்தும் ஒரே காரணிகளாக Motivational hedonism கூறிகிறது.
- **Hedonism** is a school of thought that argues that pleasure is the only intrinsic good.
- In very simple terms, a hedonist strives to maximize net pleasure (pleasure minus pain).
- The name derives from the Greek word for "delight"

66. உழவர்களின் வாழ்வியலைக்கூறும் சிற்றிலக்கியம் எது?



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

அ) பள்ளு ஆ)உலா இ)கலம்பகம் ஈ)தூது

***விடை : அ) பள்ளு***

67. பிள்ளைத்தமிழில் முதலாவதாக எப்பருவம் அமைகிறது?

அ)முத்தப்பருவம் ஆ)அம்புலிப்பருவம் இ) காப்புப்பருவம் ஈ)தாலப்பருவம்

***விடை : இ) காப்புப்பருவம்***

68. முதலாழ்வார்களின் எண்ணிக்கை யாது?

அ)5 ஆ)6 இ)7 ஈ) 3

***விடை : ஈ) 3***

விளக்கம் : பொய்கையாழ்வர் பூதத்தாழ்வர் பேயாழ்வார்

69. கொல்லா விரம் குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ்சொல்லுவதென் இச்சை பாரபரமே என்று உரைத்தவர் யார்?

அ) தாயுமானவர் ஆ)பட்டினத்தார் இ)வள்ளலார் ஈ)திருமூலர்

***விடை : அ) தாயுமானவர்***

70. குற்றலாக்குறவஞ்சியின் ஆசிரியர் பெயர் தருக

அ)ஜெயங்கொண்டார் ஆ)ஒட்டக்கூத்தர் இ) திரிகூடராசப்பக்கவிராயர் ஈ)குற்றாலநாதர்

***விடை : இ) திரிகூடராசப்பக்கவிராயர்***

71. குழந்தை மையக்கல்வியில் ஆசிரியர் பணி

அ)கற்றலுக்கு மாணவர்களை ஊக்கப்படுத்துதல் ஆ)உகந்த சுற்றுச்சூழலை அளித்தல்

இ)குழுவின் செயல்படு உறுப்பினராகத்திகழ்தல் ஈ)மேற்கூறிய அனைத்தும்

***விடை : ஈ)மேற்கூறிய அனைத்தும்***

72. மகிழ்ச்சியுடன் கற்றல் என்பது கீழ்க்கண்ட எந்த கற்பித்தல் வகை கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டது?

அ)செயல்வழிக்கற்றல் ஆ)குழந்தைமையக்கற்றல் இ)தேர்வுமையக்கற்றல் ஈ)அ மற்றும் ஆ இரண்டும்

***விடை : ஈ)அ மற்றும் ஆ இரண்டும்***

73. தி வில்லேஜ் காலேஜ் என்ற வெளியிடுடின் அடிப்படையில் சமுதாயப்பள்ளியை முதன்முதலில் நிறுவியவர்

அ)இவான் இல்லிச் ஆ)ஹென்றி மோரிஸ் இ)ஜான் டூயி ஈ)மகாத்மாகாந்தி

***விடை : ஆ)ஹென்றி மோரிஸ்***

- ❖ **Henry Morris** (1889 – 1962) is known primarily as the founder of Village Colleges.
- ❖ He was the Chief Education Officer for Cambridgeshire
- ❖ The following village colleges were founded by Morris.

- Sawston Village College (1930)
- Bottisham Village College (1937)
- Linton Village College (1937)
- Impington Village College (1939)
- Bassingbourn Village College

Two further colleges were opened by him shortly after his retirement from the post in 1954.

- Soham Village College (1958)
- Comberton Village College (1959)



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

74. இந்தியாவில் 1961 ஆம் ஆண்டு சைனிக்பள்ளிகள் என்ற பள்ளி அமைப்புகள் இவருடைய கருத்தில் உருவானது

அ)A.K. கிருஷ்ணமேனன் அ)J.K. கிருஷ்ணமேனன் இS.K. கிருஷ்ணமேனன் ஈ)V.K. கிருஷ்ணமேனன்

***விடை :*** **ஈ)V.K. கிருஷ்ணமேனன்**

- சைனிக் பள்ளிகள் சொசைட்டி என்ற இந்திய அரசு அமைப்பு மூலம் அமைக்கபட்டது.
- பாதுகாப்பு அமைச்சராக இருந்த வி. கே.கிருஷ்ண மேனன் அவர்களால் 1961 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டது.

75. 5 வயது முதல் 11 வயது வரையிலான குழந்தைகளுக்கு கல்வித்தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரிக்கும் நிறுவனம் எது?

அ)மத்திய கல்வி நுட்பவியல் நிறுவனம் - புதுடெல்லி

ஆ)மத்திய கல்வி நுட்பவியல் நிறுவனம் - கர்நாடகம்

இ) மத்திய கல்வி நுட்பவியல் நிறுவனம் -ஆந்திரபிரதேசம்

ஈ) மத்திய கல்வி நுட்பவியல் நிறுவனம் - தமிழ்நாடு

***விடை : அ)மத்திய கல்வி நுட்பவியல் நிறுவனம் - புதுடெல்லி***

- Central Institute Of Educational Technology(CIET), a consitituent unit of NCERT, came into existence in the year 1984 with the merger of Center for Educational Technology and Department of Teaching Aids.
- CIET is a premiere national institute of educational technology.
- Its major aim is to promote utilization of educational technologies viz. radio,TV, films, Satellite communications and cyber media either separately or in combinations.
- The institute undertakes activities to widen educational opportunities, promote equity and improve quality of educational processes at school level.
- கர்நாடாகாவில் இருப்பவை - state institute of education technology (SIET)

76. தமிழ்மொழியை உயர்தனிச்செம்மொழி என்று முதன்முதலில் கூறியவர்

அ)மறைமலைஅடிகள் ஆ)திரு.வி.கல்யாணசுந்தரம் இ)பரிதிமாற்கலைஞர் ஈ)எஸ்.வையாபுரிப்பிள்ளை

***விடை : இ)பரிதிமாற்கலைஞர்***

விளக்கம் : XII STD பாடம் - 1 – உயர்தனிச்செம்மொழி

77. தொல்காப்பியர் சுட்டும் உரசொலிகள்

அ)லள ஆ)பம இ)சஞ ஈ)ர ழ

***விடை : ர ழ***

விளக்கம்: “நுனிநா அணரி அன்னம் வருட
ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்” ----- தொல்காப்பியம் - 95-ஒலியனியல்

78. என் என்னும் சொல் யார் காலத்தில் அன் என்று மாறியது ?

அ)பல்லவர் ஆ)பாண்டியர் இ)சேரர் ஈ)சோழர்

***விடை : ஆ)பாண்டியர்*** சு.சக்திவேல் - மொழி வரலாறு

79. முதன்முதலாகத்தமிழன் என்ற சொல்லாட்சி காணப்படும் இலக்கியம்

அ)சம்பந்தர் தேவாரத்தில் ஆ)திருமந்திரத்தில் இ)அப்பர் தேவராத்தில் ஈ)திருவாசகத்தில்



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

***விடை : இ)அப்பர் தேவாரத்தில்***

விளக்கம்: 6வது திருமுறை – அப்பர்

“ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்

அண்ணாமலை உறையும் அண்ணல் கண்டாய்”

சிறப்புடைய மொழிகள் இவை இரண்டல்லது பிறிதின்மையால் இவைகளையே ஒதியருளினார்

80. எந்த அளபெடை சோழா் காலத்தமிழில் காரணவினை காட்டும் உருபாக இருந்தது?
அ)இகரம் ஆ)உகரம் இ)அகரம் ஈ)எகரம்
***விடை : அ)இகரம்*** சு.சக்திவேல் - மொழி வரலாறு

81. ‘The God of small things’ என்ற நூலின் ஆசிரியர்
அ) அருந்ததிராய் ஆ)சல்மான் ருஷ்டி இ)ஆர்.கே.நாராயணன் ஈ)கே.ஆர்.நாராயணன்
***விடை : அ) அருந்ததிராய்***

- ***The God of Small Things*** (1997) is the debut novel of Indian writer Arundhati Roy.
- It is a story about the childhood experiences of fraternal whose lives are destroyed by the "Love Laws" that lay down "who should be loved, and how.
- The book won the Booker Prize in 1997.

82. சோடியம் குளோரைடு நீரில் சேர்க்கும் போது கரைசலின் கொதிநிலை
அ)சரியாக $100^0$c ஆ)$100^0$c விட அதிகம் இ) $100^0$c விட குறைவு ஈ)சரியாக $0^0$c
***விடை : ஆ)100 $^0$c விட அதிகம்***

83. NH 7 பின்வருவனவற்றை இணைக்கிறது
அ)டெல்லி மற்றும் கன்னியாகுமரி ஆ)காஷ்மீர் மற்றும் கன்னியாகுமாரி
இ)ஆக்ரா மற்றும் கன்னியாகுமரி ஈ)வாரணாசி மற்றும் கன்னியாகுமரி
***விடை : ஈ)வாரணாசி மற்றும் கன்னியாகுமரி***

- **வடக்கு முடிவு**வாரணாசி, உத்தர பிரதேசம்
- **தெற்கு முடிவு**: கன்னியாகுமாரி, தமிழ்நாடு
- **நீளம்**: 2,369 கிமீ (1,472 மை)

84. நோபல் அமைதி பரிசிற்காக மிக இளம் வயதில் பரிந்துரைக்கப்பட்ட பெண் கல்வி உரிமைக்காக அறியப்படுபவர்
அ)நூர் - உல் - பாத்திமா ஆ) மலாலா இ)யாஸ்மின் ஈ)நூர் - உல் ஃபரிதா
***விடை : ஆ) மலாலா***

85. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி யாருடைய ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றது
அ)ஷாஜகான் ஆ) ஜஹாங்கீர் இ)பகதூர் ஷா ஈ)ஔரங்கசீப்
***விடை : ஆ) ஜஹாங்கீர்***

86. அவர் வந்தார் என ஒருவரை மட்டும் குறிப்பது
அ)திணைவழுவமைதி ஆ)பால் வழுவமைதி இ)இடவழுவமைதி ஈ)எண்வழுவமைதி
***விடை : ஆ)பால் வழுவமைதி***

- ஒருவனை, “அவர் வந்தார்” என்பது, உயர்வினால் ஒருமைப்பால் பலர்பால் ஆயிற்று



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

87. துஞ்சினார் என்று செத்தாரைக்குறிப்பது

அ)மங்கல வழக்கு ஆ)இடக்கரடக்கல் இ)ஆகுபெயர் ஈ)குழுஉக்குறி

***<u>விடை : அ)மங்கல வழக்கு</u>***

- மங்கலமல்லாத சொற்களைக் கூறாமல் ஒழித்து, மங்கலமான சொற்களைக் கூறுதல்

செத்தார் → **துஞ்சினார், இறைவனடி சேர்ந்தார்**

சுடுகாடு → **நன்காடு**

ஓலை → **திருமுகம்**

பொய்யாகிய உடல் → **மெய்**

தாலி அறுந்தது → **தாலி பெருகிற்று**

கருப்பு ஆடு → **வெள்ளாடு**

88. அண்ணாக்கயிறு என்பது

அ)அண்ணனுக்குகட்டும் கயிறு ஆ)அர்ணாக்கொடி இ)அரைஞான் கயிறு ஈ)தாம்புக்கயிறு

***<u>விடை : இ)அரைஞான் கயிறு</u>***

89. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குக்கடன் வாங்கப்பெற்ற சொற்கள்

அ)ஓலை கறி காசு தேக்கு ஆ)மயில் மாலை பழம் ஏலம்

இ)குடி கூலி பெருமகன் கல் ஈ) அரிசி இஞ்சி கருவா(பட்டை)தோகை

***<u>விடை : அ)ஓலை கறி காசு தேக்கு</u>***

90. Bicycle என்பதன் கலைச்சொல்லாக்கம்

அ)சைக்கிள் ஆ)துவிசக்கரவாகனம் இ) ஈருருளி ஈ)மிதிவண்டி

***<u>விடை : இ) ஈருருளி</u>***

91. இரண்டு எதிரிடையான இலக்குகளுடையே மனப்போராட்டம்

அ)விலகு விலகு ஆ)விலகு –அணுகு இ)அணுகு –அணுகு ஈ)இவை எதுவும் இல்லை

***<u>விடை : அ)விலகு விலகு</u>***

92. கல்விப்புதுமையின் குறிக்கோளானது

அ) கற்றலில் மிகைமாற்றத்தை உருவாக்குவது ஆ)கற்றலில் குறை மாற்றத்ததை உருவாக்குவது

இ)கற்றலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாதது ஈ)அ மற்றும் ஆ இரண்டும்

***<u>விடை : கற்றலில் மிகைமாற்றத்தை உருவாக்குவது</u>***

93. எந்த ஆசிரமம் மனித ஒற்றுமையே உயர்வானது என்பதை பிரதிபலிக்கிறது?

அ)இராமகிருஷ்ண மடம் ஆ)விவேகானந்தர் ஆசிரமம்

இ)ஸ்ரீஅரவிந்தர் ஆசிரமம் ஈ)காந்தியடிகள் ஆசிரமம்

***<u>விடை : இ)ஸ்ரீஅரவிந்தர் ஆசிரமம்</u>***

Which Ashram presents "Ideal of Human Unity"

(A) Ramakrishna Mission (B) Vivekananda Ashram

(C) Sri Aurobindo Ashram (D) Gandhiji Ashram

- Aurobindo started a philosophical monthly magazine called *Arya*.
- A series of works *The Life Divine*, *The Synthesis of Yoga*, *Essays on The Gita*, *The Secret of The Veda*, *Hymns to the Mystic Fire*, *The Upanishads*, *The Renaissance in India*, *War and Self-*





www.Padasalai.Net www.puthiyavidiyaltheni...

*determination*, *The Human Cycle*, *The Ideal of Human Unity* and *The Future Poetry* were published in this magazine.

- Arya stopped its publication in 1921.

94. கல்வியில் ஆணுக்கு பெண் சமம் என்ற கருத்தை முதன்முதலில் பிரதிபலித்தவர்
அ)விவேகானந்தர் ஆ)ரூசோ இ)காந்தியடிகள் ஈ)தயானந்தசரஸ்வதி
***விடை : ஈ)தயானந்தசரஸ்வதி***

Who first advocated that "Women are equal to men" in Education?
(A) Vivekanandar (B) Rousseau
(C) Gandhiji (D) Dayananad Saraswathi

- The Theosophical Society and the Arya Samaj were united from 1878 to 1882, becoming the Theosophical Society of the Arya Samaj.
- Among Maharshi Dayananda's contributions are his promoting of the equal rights for women, such as the right to education and reading of Indian scriptures, and his intuitive commentary on the Vedas from Vedic Sanskrit in Sanskrit as well as Hindi so that the common man might be able to read them.
- Dayanand was the first to give the word of Swadeshi long before Mahatma Gandhi
- He advocated the equal rights and respects to women and advocated the education of a girl child like the males.

95. இந்திய அரசியல் சட்டஅமைப்பின் முகப்புரையில் விவரிக்கப்பட்ட கோட்பாடுகளில் ஒன்று
அ)சமத்துவம் ஆ)அதிகாரதன்மை இ)வேறுப்படுத்துதல் ஈ)தனிமைப்படுத்துதல்
***விடை : அ)சமத்துவம்***
இந்திய அரசியலமைப்பின் முகப்புரை(preamble)யில், " இறையாண்மை உடைய ஜனநாயக, சமதர்ம, சுதந்திரக் குடியரசு" என்றும் " இந்திய யூனியன்" என்றும் இந்தியா பெயரிடப்பட்டுள்ளது.

96. ஒலியை ஆராயும் முறையை எத்தனை பிரிவாக வகுக்கின்றனர்?
அ)இரண்டு ஆ)நான்கு இ)மூன்று ஈ)ஆறு
***விடை : இ)மூன்று***
1.பௌதீகம் 2. கேட்பொலி 3. உச்சரிப்பொலியியல்

97. அரேபியா எகிப்து போன்ற பகுதிகளில் பேசப்படும் மொழியினம்
அ)அன்னாமியினம் ஆ)உலாப்இனம் இ)நீக்ரோ இனம் ஈ) செமிட்டிக் இனம்
***விடை : ஈ) செமிட்டிக் இனம்***

98. குவிமொழி எந்த மாநிலத்தில் பேசப்படுகின்றது
அ)ஒரிசா ஆ)மத்தியப்பிரதேசம் இ)பீகார் ஈ)மைசூர்
***விடை : அ)ஒரிசா***

99. திராவிட மொழிகளிலுள்ள திணை பால் பாகுபாடு சிறந்தது என்று கூறியவர்
அ)வீரமாமுனிவர் ஆ)குண்டர்ட் இ) கால்டுவெல் ஈ)எமனோ
***விடை : இ) கால்டுவெல்***

100.தமிழ்மொழி பெருமை மிக்க பழைய வரலாறு உடையதாகும் என்று உரைத்தவர்
அ)தீட்சதர் ஆ)தெ.பொ.மீ இ)ஹீராஸ் ஈ)சாட்டர்ஜி



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

***விடை : இ)ஹீராஸ்***

101.மூன்றாவது இந்திய தேசிய காங்கிரஸ்(1887) நடைபெற்ற இடம்
அ)டெல்லி ஆ)பம்பாய் இ) சென்னை ஈ)கல்கத்தா

***விடை : இ) சென்னை***

- முதல் மாநாடு பம்பாய் 1885
- இரண்டாவது மாநாடு கல்கத்தா 1886

102.கங்கை கொண்ட சோழன் என அழைக்கப்படுவர்
அ)முதலாம் பராந்தகசோழன் ஆ)முதலாம் இராஜராஜசோழன்
இ)இரண்டாம் இராஜராஜசோழன் ஈ)முதலாம் இராஜேந்திர சோழன்

***விடை : ஈ)முதலாம் இராஜேந்திர சோழன்***

- 1022-ல் இராசேந்திர சோழன் இந்தியாவின் கிழக்குக் கடற்கரை முழுவதையும் வென்று கங்கையையும் வென்றான்.
- அந்த வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழன் என்ற பட்டப்பெயர் கொண்டான்.

103.2013 ICC சாம்பியன் கோப்பை கிரிக்கெட் தொடரில் தொடர் நாயகன் விருது பெற்றவர்
அ)தோனி ஆ)விராட் கோலி இ)ஷிகர் தவான் ஈ)ரவீந்திர ஜடேஜா

***விடை : இ)ஷிகர் தவான்***

- Player of the serious : ஷிகர் தவான்
- Player of the match : ரவீந்திர ஜடேஜா(golden ball)

104. ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் அரசியல் சாசனத்தின் பிரிவு
அ)பிரிவு 340 ஆ)பிரிவு 360 இ)பிரிவு 370 ஈ)பிரிவு 390

***விடை : இ)பிரிவு 370***

- **Article 370** of the Indian constitution is a law that grants special autonomous status to Jammu and Kashmir.

**Notwithstanding anything in this Constitution:**

a. the provisions of article 238(now repealed) shall not apply in relation to the State of Jammu and Kashmir,
b. the power of Parliament to make laws for the said State shall be limited to;
i. those matters in the Union List and the Concurrent List which, in consultation with the Government of the State, are declared by the President to correspond to matters specified in the Instrument of Accession governing the accession of the State to the Dominion of India as the matters with respect to which the Dominion Legislature may make laws for that State; and
ii. such other matters in the said Lists, as, with the concurrence of the Government of the State, the President may by order specify.

105. NCTE என்பது
அ) National council for techinical education ஆ)National centre for teacher education
இ) National council for teacher education ஈ) National centre for technical education

***விடை :*** **இ) National council for teacher education**

106. ஒலிவடிவிலும் வரி வடிவிலும் அமைந்த எழுத்துக்களின் தனித்தன்மையை விளக்குவது



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

2013 -14 முதுகலை ஆசிரியர் தமிழ்

அ)மொழி மரபு ஆ)தொகைமரபு இ)நூன்மரபு ஈ) பிறப்பியல்

***விடை : இ)நூன்மரபு***

ஒலி வடிவத்தில் அமைந்த எழுத்துக்களின் தனித்தன்மையை மட்டும் விளக்குவது – பிறப்பியல்

107. சகார ஞகாரம் பிறப்பு

அ)நுனிநாஅண்ணம் ஆ) இடைநா அண்ணம் இ)முதல்நா அண்ணம் ஈ)கடைநா அண்ணம்

***விடை : ஆ) இடைநா அண்ணம்***

108.கி.பி 17ஆம் நூற்றாண்டில் எழுந்த சொல்லிணக்க நூல்

அ) பிரயோக விளக்கம் ஆ)நேமிநாதம் இ)முத்துவீரியம் ஈ)தமிழ்நெறி விளக்கம்

***விடை : அ) பிரயோக விளக்கம்***

109. சொல்லும் பொருளும் ஒரு தாளின் இரண்டு பக்கம் போன்றது என்று கூறியவர்

அ)கால்டுவெல் ஆ)டிசசூர் இ)சோம்ஸ்கி ஈ)சீகன்பால்கு

***விடை : அ)கால்டுவெல்***

110.யாப்பிலக்கணக் கலைக்களஞ்சியம் எனஅழைக்கப்படுவது

அ)யாப்பருங்கலக்காரிகை ஆ)யாப்பருங்கலம் இ)யாப்பருங்கல விருத்தியுரை ஈ)இலக்கணவிளக்கம்

***விடை : அ)யாப்பருங்கலக்காரிகை***

111. கி.பி 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 6ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம்

அ) நீதிநூல் காலம் ஆ)பக்தி இலக்கிய காலம் இ)சிற்றிலக்கிய காலம் ஈ)நாடகஇலக்கியகாலம்

***விடை : அ) நீதிநூல் காலம்***

112. காப்பிய விதிகள் பற்றி குறிப்பிடும் இலக்கண நூல்

அ)தண்டியலங்காரம் ஆ)யாப்பெருங்கலக்காரிகை இ)நன்னூல் ஈ)தொல்காப்பியம்

***விடை : அ)தண்டியலங்காரம்***

113.உலக நிலையாமையை எடுத்துக்காட்டும் நீதி நூல்

அ)திரிகடுகம் ஆ)ஆசாரக்கோவை இ)ஏலாதி ஈ) முதுமொழிக்காஞ்சி

***விடை : ஈ) முதுமொழிக்காஞ்சி***

114.இலத்தீன் மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்தவர்

அ)இராஜாஜி ஆ)ஜி.யு.போப் இ) வீரமா முனிவர் ஈ)வ.வே.சு.ஐயர்

***விடை : இ) வீரமா முனிவர்***

115.புகார் காண்டத்தின் இறுதி காதை

அ) நாடுகாண்காதை ஆ)காடுகாண்காதை இ)கொலைகளக்காதை ஈ)வரம்தருகாதை

***விடை : அ) நாடுகாண்காதை***

116. ஆதி நிகண்டு என அழைக்கப்பெறுவது எது?

அ)சூடாமணிநிகண்டு ஆ)பிங்கலநிகண்டு இ)திவாகர நிகண்டு ஈ) சேந்தன் திவாகரம்

***விடை : இ)திவாகர நிகண்டு அல்லது ஈ) சேந்தன் திவாகரம்***

- திவாகரன் என்ற புலவரால் இயற்றப்பட்டதால் திவாகர நிகண்டு
- தன்னை ஆதரித்த சேந்தன் என்ற மன்னனை 19 இடங்களில் திவாகரர் இந்நூலில் குறிப்பிடுகிறார்.
- எனவே, இந்நூல் சேந்தன்திவாகரநிகண்டு என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்நிகண்டு தமிழில் தோன்றிய முதல் நிகண்டு என்பதால் முதல் நிகண்டு,ஆதிநிகண்டு,ஆதிதிவாகரம் என அழைக்கப்படுகிறது.

2013 -14 முதுகலை ஆசிரியர் தமிழ்

❖ காலம் 9 ம் நூற்றாண்டு

117. கம்பராமாயணம் நூலுக்குக்கம்பர் சூட்டிய பெயர் யாது?
அ) இராமாவதாரம் ஆ)கம்பராமாயணம் இ)கம்பநாடகம் ஈ)கம்பநாட்டான்கதை
***விடை : அ) இராமாவதாரம்***
XII STD செய்யுள் பக்கம் - 58 – முதல் பத்தி

118.வினா - விடை வடிவில் அமைந்த இஸ்லாமிய இலக்கியம் எது?
அ) கிஸ்ஸா ஆ)நாமா இ)பல்சந்தமாலை ஈ)மசாலா
***விடை : ஈ)மசாலா***
❖ கிஸ்ஸா – கதைக்கூறுவது
❖ நாமா - இது பாரசீகப்பாவகை

119.உடம்பார் அழியின் உயிரால் அழிவர் -யாருடைய கூற்று
அ)திருவாதவூரர் ஆ)அப்பர் இ) திருமூலர் ஈ)சம்பந்தர்
***விடை : இ) திருமூலர்***

120.விக்கிரமசோழன் உலாவின் ஆசிரியர் யார்?
அ) ஒட்டக்கூத்தர் ஆ)தரணி முழுதடையான் இ)ஞானதேவன் ஈ)தேரியன் மாதேவி
***விடை : அ) ஒட்டக்கூத்தர்***
விளக்கம் : XII STD செய்யுள் 80ம்பக்கம் - சிற்றிலக்கியங்கள் - இராசராசன்சோழன் உலா

121.ஆற்றுப்படைகளில் அடியளவில் பெரிய நூல் எது?
அ)திருமுருகாற்றுப்படை ஆ)சிறுபாணாற்றுப்படை இ)மலைபடுகடாம் ஈ)பெரும்பாணற்றுப்படை
***விடை : இ)மலைபடுகடாம்***
அ)திருமுருகாற்றுப்படை – 317 ஆ)சிறுபாணாற்றுப்படை – 269
இ)மலைபடுகடாம் -586 ஈ)பெரும்பாணற்றுப்படை-500

122.வஞ்சி நெடும்பாட்டு என வழங்கப்பெறும் நூல் எது?
அ)மதுரைக்காஞ்சி ஆ)பட்டினப்பாலை இ)முல்லைப்பாட்டு ஈ)குறிஞ்சிப்பாட்டு
***விடை : ஆ)பட்டினப்பாலை***

123.வடக்கிருந்து உயர் நீத்த சோழ மன்னன் யார்?
அ)கரிகால்சோழன் ஆ)இராஜராஜசோழன் இ)கோச்செங்கணனான் ஈ)கோப்பெருஞ்சோழன்
***விடை : ஈ)கோப்பெருஞ்சோழன்***

124.சரியான விடையைத்தேர்ந்தெடுக்க
A)குறிஞ்சிக்கலி - இளநாகனார்
B)முல்லைக்கலி – கபிலர்
C)மருதக்கலி – நல்லுருந்திரன்
D)பாலைக்கலி – பெருங்கடுங்கோ.
***விடை :*** **D)பாலைக்கலி – பெருங்கடுங்கோ.**

125. நக்கீரர் பத்துப்பாட்டில் பாடிய நூல்கள்
அ)நெடுநல்வாடை மதுரைக்காஞ்சி ஆ)திருமுருகாற்றுப்படை நெடுநல்வாடை



www.Padasalai.Net www.puthiyavidiyaltheni.in

இ)திருமுருகாற்றுப்படை மதுரைக்காஞ்சி ஈ)நெடுநல்வாடை பட்டினப்பாலை

***விடை : ஆ)திருமுருகாற்றுப்படை நெடுநல்வாடை***

126.----------என்பவர் கற்றல் மாற்றத்தினை விளக்குவதற்காக ஒத்தக்கூறுகளின் கோட்பாட்டினை உருவாக்கினார்

அ)பாவ்லோவ் ஆ)குத்தையர் இ)வுட்வர்த் ஈ)தார்ன்டைக்

***விடை : ஈ)தார்ன்டைக்***

127.புலன் உணர்வு தகவல்களுக்கு விளக்கம் தருவதில் ------மேம்பட்ட அறிதலுக்கு உட்படுகிறது

அ)திரிபுகாட்சி ஆ)புலன்காட்சி இ)புலன்உணர்வு ஈ)இல்பொருள்காட்சி

***விடை : ஆ)புலன்காட்சி***

128. I)சிக்கல் தீர்க்கும் திறன் வயது சார்ந்து வளர்ச்சி அடையும்

II இவ்வளர்ச்சி வேகம் மற்றும் துல்லியம் இவை இரண்டிலும் அமையும்

A) I சரியான பதில் II தவறானது B) I மற்றும் II தவறான பதில

C) I I சரியான பதில் I தவறானது D) I மற்றும் II சரியான பதில்

***விடை :* D) I மற்றும் II சரியான பதில்**

129.முயன்று தவறி கொள்கையை வழங்கியவர்

அ)இவான் பாவ்லோவ் ஆ) எட்வர்ட் எல். தார்ண்டைக் இ)ஸ்கின்னர் ஈ)ஹல்

***விடை : ஆ) எட்வர்ட் எல். தார்ண்டைக்***

130.எபிங்காஸின் சோதனை எதனுடன் தொடர்புடையது?

அ)நினைவு வளைவு ஆ) மறதி வளைவு இ)கற்றல் வளைவு ஈ)இவை எதுவும் இல்லை

***விடை : ஆ) மறதி வளைவு***

131. சொற்களைச்சிறந்த முறையில் வைப்பதே வசனம் சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பதே கவிதை என்று கூறியவர்

அ)ஷெல்லி ஆ)டி.எஸ்.எலியட் இ)கோல்ரிட்ஜ் ஈ)கீட்ஸ்

***விடை : இ)கோல்ரிட்ஜ்***

விளக்கம் : XII STD பாடம் - 3 – கவிதை – பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பக்கம் - 138 – 2வது பத்தி

132.ஒவ்வொரு சொல்லையும் சுண்டிப்பார்த்து ஓசைநயம் செவ்வனே உள்ளதா என்று ஆராய்ந்து பயன்படுத்தும் கதை ஆசிரியர்

அ)கல்கி ஆ)அகிலன் இ)சுஜாதா ஈ)லா.ச.ராமாமிர்தம்

***விடை அ)கல்கி***

133.நிஜ நாடக இயக்கம் நிகழ்த்திய நவீன நாடகம்

அ)பலூன் ஆ)துர்க்கிர அவலம் இ)ஊர்வலம் ஈ)பலி ஆடுகள்

***விடை : ஈ)பலி ஆடுகள்***

- 1992:' Attukuttikal nankal'-a children's play participated at the 3 day Modern Theatre Festival,Condcuted by Nija Nataka Iyakkam at Madurai.
- 1982:'Paloon'Play written by Gnani
- **Jan.1984:'Durkira Avalam'-partcipated in the south zone theatre competition conducted by Sangeeth Natak Academy at Bangalore and Participated in the National**



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

2013 -14 முதுகலை ஆசிரியர் தமிழ்

**Festival-Natyal Samorath '84 in New Delhi on 16.12.84.**

134.தொல்காப்பியத்தில் ஆய்தல் என்ற சொல்லுக்குக்கூறப்படும் பொருள்
அ) உள்ளதன் நுணுக்கம் ஆ)நுட்பமாய் அறிதல்
இ)தேடுதல் ஈ)கூர்ந்து கவனித்து அறிந்து கொள்ளுதல்
***விடை : அ) உள்ளதன் நுணுக்கம்***

135.அர்த்தங்கள் மையம் இழந்தவை நிலையாற்றலை ஒத்தி வைப்புக்குள்ளானவை விளக்கிய கோட்பாடு
அ)பின் நவீனத்துவம் ஆ)பின் காலனியம் இ)நவீனத்துவம் ஈ)பின் அமைப்பியல்
***விடை : ஈ)பின் அமைப்பியல்***

136.ஒரு குறிப்பிட்ட வேலை கற்றது பின்னர் மற்றொரு வேலை கற்பதற்கு உதவியாக இருப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ)எதிர்மறை கற்றல் மாற்றல் ஆ)பூஜ்யகற்றல் மாற்றல்
இ)நேரிடையான கற்றல் மாற்றம் ஈ)இவை எதுவும் இல்லை
***விடை : இ)நேரிடையான கற்றல் மாற்றம்***

137. மனித தேவைகளை உயர்நிலை படி கோட்பாடாக உருவாக்கியவர்
அ)மார்கன் ஆ)முர்ரே இ)அட்கின்ஸன் ஈ)ஆப்ரகாம் மாஸ்லோ
***விடை : ஈ)ஆப்ரகாம் மாஸ்லோ***

138.தற்காப்பு நடத்தை அல்லாதது எது?
அ)காரணம் கற்பித்தல் ஆ)ஈடுசெய்தல் இ)புறத்தெரிதல் ஈ)மனப்போராட்டம்
***விடை : ஈ)மனப்போராட்டம்***

139.இவற்றில் எது ஆளுமையின் உயிரியியல் காரணி அல்ல?
அ)உடல் சார்ந்த பண்புகள் ஆ)நுண்ணறிவு இ)நரம்புமண்டலம் ஈ)வேதிப்பொருட்கள்
***விடை : ஆ)நுண்ணறிவு***

140.நுண்ணறிவு ஈவு கணக்கிடும் சூத்திரம் எது?

அ) $\frac{\text{மனவயது}}{\text{கால வயது}} \times 100$

ஆ) $\frac{\text{கால வயது}}{\text{மன வயது}} \times 100$

இ)மனவயது X காலவயது X 100 ஈ)மனவயது X காலவயது - 100

***விடை :*** $\frac{\text{மனவயது}}{\text{கால வயது}} \times 100$

141.கவிதை இலக்கியங்களுள் பேரிலக்கியமாகத்திகழ்வது



www.Padasalai.Net www.puthiyavidiyaltheni.in

அ) காப்பியம் ஆ)அறஇலக்கியம் இ)பக்தி இலக்கியம் ஈ)சிற்றிலக்கியம்

***விடை : அ) காப்பியம்***

இலக்கியத்திறனாய்வியல் - தா.ஏ.ஞானமூர்த்தி - பக்கம் 262 - தலைப்பு - காப்பியம்

142. ‘மணநூல்’ என்று அழைக்கப்படுவது

அ)சிலப்பதிகாரம் ஆ)மணிமேகலை இ)வளையாபதி ஈ)சீவகசிந்தாமணி

***விடை : ஈ)சீவகசிந்தாமணி***

143. ‘அடிகள் நீரே அருள்க’ என்ற கூற்றுக்கு உரியவர்

அ)கோவலன் ஆ)மாடலன் இ)சாத்தனார் ஈ)இளங்கோவடிகள்

***விடை : ஈ)இளங்கோவடிகள் (அ) இ)சாத்தனார்***

எ-டு – 1. ‘சொல்லின் செல்வர்’ என்று கூற்றுக்கு உரியவர் ரா.பி.சேதுப்பிள்ளை ***(இளங்கோவடிகள்)***

எ-டு - 2. சங்க இலக்கியத்தில் தலைவியின் கூற்று என்பது தலைவி கூறும் கூற்று ***(சாத்தனார்)***

144.மணிமேகலையால் யானைத் தீ பசிநோய் தீர்க்கப்பட்டவர்

அ)ஆதிரை ஆ)சுதமதி இ)சித்திராபதி ஈ)காயசண்டிகை

***விடை : ஈ)காயசண்டிகை***

- பறக்கும் சக்தியை இழந்து யானைத்தீ என்கிற நோயை சாபமாகப் பெற்றவள் - காயசண்டிகை
- ஆதிரையின் கற்பு கதையைக் கூறி அமுதசுரபியில் முதன் முதலாக பிச்சை வாங்குமாறு மணிமேகலையிடம் கூறியவள் - காயசண்டிகை.

145.குண்டலகேசிக்கு எதிராகத்தோன்றிய வாத நூல்

அ) நீலகேசி ஆ)வளையாபதி இ)உதயன குமார காவியம் ஈ)சூளாமணி

***விடை : அ) நீலகேசி***

www.Padasalai.Net

146. குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும் என மான உணர்ச்சி மிகுந்த பாடலை பாடிய மன்னன் யார்?

அ)சேரமான் கணைக்கால் இரும்பொறை ஆ) கிள்ளி வளவன்

இ)பாண்டியன் அறிவுடை நம்பி ஈ)நலங்கிள்ளி.

***விடை : அ)சேரமான் கணைக்கால் இரும்பொறை***

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளில் தப்பார்
தொடர்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீ தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ இவ் உலகத்தானே?

- ❖ பிறந்ததும் குழந்தை இறந்துவிட்டாலும், பிறக்கும்போதே சதைப் பிண்டமாகப் பிறந்துவிட்டாலும் அந்தப் பிறவிக் குழந்தை ஆள் அன்று என்று எண்ணி அதனை வாளால் காயப்படுத்துவர்.
- ❖ இப்போது நான் காயமில்லாமல் வஞ்சகத்தால் பிடிபட்டுக் கிடக்கிறேன். நான் ஆண்மகன் ஆவேனா?
- ❖ அன்றியும் என் வயிற்றுத் தீயைத் தணித்துக்கொள்வதற்காகத் தண்ணீரைக் கேட்டுப் பெற்றிருக்கிறேன்.
- ❖ இதனை உண்ணவும் வேண்டுமா? (உண்ணக்கூடாது என்று எண்ணி நீரையும் உண்ணாமல் கிடந்து நா வறண்டு உயிர் நீத்தான்)

147.பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே எனப்பாடியவர் யார்?

அ)ஔவையார் ஆ)உலோச்சனார் இ)கணியன் பூங்குன்றனார் ஈ)பரணர்



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

***விடை : இ)கணியன் பூங்குன்றனார்***

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ யானாது
கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (புறம்: 129)

- மாண்புள்ள பெரியோரைக் கண்டு நாம் வியப்படைய வேண்டுவதில்லை.
- அப்படி ஒருவேளை அவரை வியந்து போற்றினாலும் நம்மினும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களை இகழ்தல் கூடவே கூடாது.

148.உவமையால் பெயர் பெற்ற புலவர்
அ)ஓதலாந்தையார் ஆ)கல்பொருசிறுநுரையார் இ)வன்பரணர் ஈ)அம்மூவனார்
***விடை : ஆ)கல்பொருசிறுநுரையார்***

'காமம் தாங்குமதி என்போர் தாம் அஃது
அறியுநர் கொல்லோ அனை மதுகையர்கொல்
யாம் எம் காதலர்க் காணேம் ஆயின்
செறி துனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல் பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லாகுதுமே'

- நீர் பாறாங்கல்லில் மோதும்போது நுரை உண்டாகும்.
- அந்த நுரையின் துளி ஒவ்வொன்றாக உடைந்து இல்லாமல் போகும்.
- காமம் என்னும் நீர் என்மீது மோதுவதால் நான் நுரை போல வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.
- இல்லாவிட்டால் என் உயிர் இல்லாமல் போய்விடும்.
- காமத்தைப் பொறுத்துக்கொண்டு அவரை நினைக்காதிரு என்கிறார்களே!
- அவர்களுக்குக் காமத்தைப் பற்றித் தெரியுமா? என்றாவது காமத்தை மறந்திருக்கும் வலிமை பெற்றிருந்தார்களா? - என்று தலைவி தன் தோழியிடம் வினவுகிறாள்.
- குறுந்தொகை பாடல் : 290.

149. கோப்பெருஞ்சோழனோடு பிசிராந்தையாரைப்போல் நட்பு கொண்ட மற்றொரு புலவர் யார்?
அ)பொத்தியார் ஆ)கபிலர் இ)தொல்கபிலர் ஈ)பெருஞ்சித்திரனார்
***விடை : அ)பொத்தியார்***

150.எத்திசைச்செலினும் அத்திசைச்சோறே எனப்பாடிய புலவர் யார்?
அ)பாரிமகளிர் ஆ)பெருங்கோப்பெண்டு இ)வெள்ளிவீதியார் ஈ)ஔவையார்
***விடை : ஈ)ஔவையார்***